# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## *மார்கழி 16, ஸ்ரீமுக - திருவள்ளுவர் ஆண்டு 2024*

## *1993, டிசம்பர் 31, வெள்ளிக்கிழமை*

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் காலை 10.00 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"முடிவும் இடையூறும் முற்றியாங்கு எய்தும்
படுபயனும் பார்த்துச் செயல்"

ஒரு வினையைச் செய்து முடிப்பதற்குரிய முயற்சியும், அதனைச் செய்யும்போது வரும் இடையூறும், வினை முடிந்தால் ஏற்படக்கூடிய பெரும்பயனும் ஆகிய இவற்றையெல்லாம் ஆராய்ந்து பார்த்து, அக்குறிப்பிட்ட வினையைச் செய்திடல் வேண்டும்.

## 1. இரங்கல் குறிப்புகள்

### முன்னாள் உறுப்பினர்கள் மறைவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரங்கற் குறிப்புகள். தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினர்களான திருமதி சாவித்திரி சண்முகம் அவர்கள் 24-12-1993 அன்றும் திரு. எஸ். அழகுத் தேவர் அவர்கள் 29-12-1993 அன்றும் மறைந்தமை குறித்து இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி சாவித்திரி சண்முகம் அவர்கள் 1957-ஆம் ஆண்டு முதல் 1961-ஆம் ஆண்டு வரை கோயம்பத்தூர் மாவட்டம், கோயம்பத்தூர்-1 தொகுதியிலிருந்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நல்லமுறையில் பணியாற்றியுள்ளார். திரு. எஸ். அழகுத் தேவர் அவர்கள் 1967-ஆம் ஆண்டு முதல் 1970-ஆம் ஆண்டுவரை அன்றைய இராமநாதபுரம் மாவட்டம் சிவகாசி தொகுதியிலிருந்தும், மற்றும் 1971-ஆம் ஆண்டு முதல் 1976-ஆம் ஆண்டுவரை சாத்தூர்

தொகுதியிலிருந்தும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கு இருமுறை தேர்ந்தெடுக்கப்பட்டு செவ்வனே பணியாற்றியுள்ளார். அவர்களின் மறைவு குறித்து, அவர்களை இழந்துவிட்ட குடும்பத்தினர்க்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் இப்பேரவையின் சார்பிலும் என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன். இயற்கையெய்தியவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில், மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு மணித்துளிகள் எழுந்து நின்று அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

*(உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு மணித்துளிகள் எழுந்து நின்று அமைதி காத்தனர்)*

## 2. வினாக்கள்-விடைகள்

### *(அ)* உடுக்குறியிட்ட வினாக்கள்

***மாண்புமிகு பேரவைத் தலைவர்:*** வினாக்கள் விடைகள். வினா எண் *101,* டாக்டர் எஸ். சுந்தரராஜ்; மாண்புமிகு நிதியமைச்சர்.

*101--*

**பரமக்குடி நகராட்சியில் வாக்குச் சாவடிகளைப் பிரித்து அமைத்தல்**

****20401–டாக்டர் எஸ். சுந்தரராஜ்:***

மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

*(அ)* பரமக்குடி நகராட்சியில் மேலமுஸ்லீம் நடுநிலைப்பள்ளியில் *10* வாக்குச் சாவடிகள் ஒரே இடத்தில் இருப்பதால் அவற்றில் *4* வாக்குச் சாவடிகளை யாதவா நடுநிலைப் பள்ளிக் கட்டிடத்திற்கு மாற்ற அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம். எனில், விவரம் என்ன?

***மாண்புமிகு டாக்டர். இரா. நெடுஞ்செழியன், நிதியமைச்சர் :*** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*(அ)* மற்றும் *(ஆ)*: இராமநாதபுரம் மாவட்டம் *200*-பரமக்குடி (தனி) சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பரமக்குடி நகராட்சியில் ஹைராத்துல் அலியா மேலமுஸ்லீம் நடுநிலைப்பள்ளியில் உள்ள *10* வாக்குச் சாவடிகளில் *4* வாக்குச் சாவடிகளை (வாக்குச்சாவடி எண்கள்